©
GOVERNMENT OF TAMIL NADU
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No.197/2009.
[Price: Rs. 18.40 Paise.

தமிழ்நாடு அரசிதழ்

சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 651A] சென்னை, வெள்ளிக்கிழமை, அக்டோபர் 17, 2025
புரட்டாசி 31 விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு-2056

பகுதி IV—பிரிவு 1

தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்

	பக்கங்கள்
சட்டமுன்வடிவுகள்:	
எண். 36/2025.—தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டம்	2–8
எண். 37/2025—தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் (திருத்தச்) சட்டம்	9–14
எண். 38/2025—தமிழ்நாடு கடல்சார் வாரிய (திருத்தச்) சட்டம்	15–20
எண். 39/2025—தமிழ்நாடு மின் நுகர்வு அல்லது விற்பனை மீதான வரி (திருத்தச்) சட்டம்	21–26
எண். 40/2025—தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டம்	27–30
எண். 41/2025—தமிழ்நாடு தொழிற்கல்வி நிலையங்களில் சேர்க்கை (திருத்தச்) சட்டம்	31–34
எண். 42/2025—தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம்	35–40
எண். 43/2025—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.6) சட்டம்	41–46

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 36/2025

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் மூலம் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

144–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 144–A ஆம் பிரிவில்,– தமிழ்நாடு சட்டம் 21/1994.

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(a) "1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 9/1999)" எனும் சொற்றொடருக்காக, "(1–B) ஆம் உட்பிரிவு" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) வரம்புரைக்குப் பின்பு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுத்தல் வேண்டும், அதாவது,–

"மேலும் வரம்புரையாக, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1999) 179–B பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தினை வைத்துள்ள நபரெவரும், கூறப்பட்ட உரிமத்தோடு தொடர்புடைய, நகராட்சி எல்லைகளுக்குள் மலக்கசடு அல்லது கழிவுநீரை அப்புறப்படுத்த அனுமதிக்கின்ற நேர்வில், ஊராட்சி எல்லைகளுக்குள் அவற்றைச் சேகரித்து கொண்டு செல்லலாம்.";

(2) அவ்வாறு திருத்தம் செய்யப்பட்டவாறான, (1) ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவுகளானவை உட்புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:–

"(1–A). மலக்கசடு அல்லது கழிவுநீரை சேகரித்தல், கொண்டு செல்லுதல் அல்லது அப்புறப்படுத்துதலுக்கு கருதும் நபரெவரும், உரிமம் வழங்குவதற்காக வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விவரங்கள், ஆவணங்கள் அடங்கிய அத்தகைய படிவத்திலும் அத்தகைய கட்டணத்துடனும், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(1–B). (1–A) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு உரிமத்தை வழங்கலாம் அல்லது அதற்கான காரணத்தை பதிவு செய்து, உரிமம் வழங்குவதற்கு மறுக்கலாம்.

(1–C). (1–B) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமானது, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவிற்கு செல்லுபடியாகுதல் வேண்டும்.

(1–D). உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமானது, அது முடிவடைவதற்கு முப்பது நாட்களுக்கு முன்பு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்துடன் அத்தகைய முறையில் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம், சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(1–E). (1–B) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள கால வரம்பும் செயல்முறையும், உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு சமமாக பொருந்துதல் வேண்டும்.'';

(3) (3) ஆம் உட்பிரிவில்,–

(a) (a) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(a) உரிமத்தில் குறிப்பிடலாகும் நேரம், வழித்தடம் மற்றும் வடிகட்டும் இடம் ஆகியவை தொடர்பான நெறிமுறைகளையும் வரையறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்;'';

(b) (b) கூறில், ''முறை ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மிகாத'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(c) (c) கூறில், ''ஆய்வாளர்'' எனும் சொல்லுக்காக, ''உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(d) அவ்வாறு திருத்தம் செய்யப்பட்டவாறான, (c) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(d) குறிப்பிடப்பட்ட வாகனம், வகுத்துரைக்கப்படலாகும் புவி இடங்காட்டியுடன் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல் வேண்டும் மற்றும் புவி இடங்காட்டி கருவியானது இடையூறு இல்லாமல் செயல்படுவதையும், தரவினை அனுப்புவதையும் உறுதி செய்தல் வேண்டும்.''.

(4) (4) ஆம் உட்பிரிவில்,–

(a) (a) கூறில்,–

(i) ''ஆய்வாளர்'' எனும் சொல்லுக்காக, ''உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (i) இனத்திற்காக, பின்வரும் இனமானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(i) மலக்கசடு அல்லது கழிவுநீரை வடிகட்டுதலுக்கான இடங்கள்;'';

(b) (b) கூறில், ''செயலாட்சி அலுவலர்'' எனும் சொற்றொடருக்காக, ''உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) (c) கூறில், ''வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய அலுவலர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுவானது, குறிப்பிட்ட ஊர்திகளின் இயக்கத்தைக் கண்காணித்தல் வேண்டும்'' எனும் சொற்றொடருக்காக, ''உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது, உரிமதாரர்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க, துணை வட்டார வளர்ச்சி அலுவலரின் படிநிலைக்கு குறையாத அத்தகைய அலுவலர்களை நியமித்தல் வேண்டும்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(5). (5) ஆம் உட்பிரிவில், ''நபரெவரும் இந்தப் பிரிவை மீறினால் அல்லது அதனுடன் இணங்க தவறினால்'' எனும் சொற்றொடருக்குப் பின்பு, ''அல்லது இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது வழங்கப்பட்ட உரிமத்திற்கு உட்பட்ட நிபந்தனைகள் மற்றும் வரையறைகளின்'' எனும் சொற்றொடரானது சேர்க்கப்படுதல் வேண்டும்.

(6). (6) ஆம் உட்பிரிவில்,—

(a) (a) கூறில், ''மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுவானது, உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் கோரலாம்'' எனும் சொற்றொடருக்காக, ''உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (b) கூறில், ''மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுவானது, உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் கோரலாம்'' எனும் சொற்றொடருக்காக, ''உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) அவ்வாறு திருத்தம் செய்யப்பட்டவாறான, (b) கூறுக்குப் பின்பு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

வரம்புரையாக, உரிமத்தை இரத்து செய்வதற்கான ஆணையினை பிறப்பிப்பதற்கு முன்பு, உரிமதாரருக்கு பதினைந்து நாட்களுக்குள் அவரது தரப்பு முறையீட்டினை செய்வதற்கான வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.''.

(7) விளக்கத்திற்காக, பின்வரும் விளக்கமானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

'' விளக்கம்.— இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக,—

(a) ''அகற்றும் வசதி'' என்பது வகுத்துரைக்கப்படக்கூடியவாறு, மலக்கசடு மற்றும் கழிவுநீரை அறிவியல் பூர்வமாக சுத்திகரித்து அகற்றுவதற்கான ஏற்பாடுகள் என்று பொருள்படும்;

(b) ''உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு'' என்பது (1–B) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமம் வழங்குவதற்காக, அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் அதிகார அமைப்பு என்று பொருள்படும்;

(c) ''மலக்கசடு'' என்பது செரிமானமாகாத அல்லது பாதி செரிமானமான அரைநீர்ம அல்லது அரைதிண்ம வடிவிலுள்ள, மலக்கழிவு மற்றும் சாம்பல் நீருடனான அல்லது இல்லாத கருப்புநீரின் சேர்க்கை என்று பொருள்படும்;

(d) ''உரிமதாரர்'' என்பவர் (1–B) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினை வைத்துவரும் நபரெவரும் ஆவார்;

(e) ''கழிவுநீர்'' என்பது, கழிவுநீர்த் தொட்டி அல்லது கழிவுநீர் குளங்களில் சேர்ந்தடைந்துள்ள அல்லது அடங்கியுள்ள திரவ மற்றும் திடப்பொருள் என்று பொருள்படும்;

(f) "குறிப்பிடப்பட்ட வாகனம்" என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதலுக்காக, 1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மையச் சட்டம் 59/1988) கீழ் அவ்வப்போது ஒப்புதலளிக்கப்படலாகும், அத்தகைய விவரக்குறிப்புகளுடன் கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட விசைக்குழாய் மற்றும் சேமிப்புத் தொட்டியுடன் பொருத்தப்பட்ட உறிஞ்சு சரக்குந்துகள் அல்லது அத்தகைய பிற வாகனம் என்று பொருள்படும்;

3. அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டத்தின் 144–A ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"144– B. சாம்பல் நீர் மேலாண்மை.– (1) எந்தவொரு வீடு, வணிக நிறுவனம் அல்லது அமைப்பும், சுற்றுச்சூழலை கடுமையாக பாதிக்கும் எந்த வகையிலும் திறந்த நிலத்திலோ அல்லது எந்தவொரு நீர்நிலைகளிலோ சாம்பல்நீரை வெளியேற்றக்கூடாது. ஊராட்சியால் குறிப்பிடப்படலாகும் நடைமுறைகளுக்கிணங்க கழிவுநீர் அகற்றுதல் கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

(2) ஊராட்சியானது சாம்பல்நீரைக் கொண்டு செல்லும் வடிகால்களின் வெளியேற்றப் பகுதிகளில், அரசால் அவ்வப்போது குறிப்பிடப்படலாகும் அத்தகைய முறையில் சாம்பல் நீருக்கான இறுதி சுத்திகரிப்பு முறையை நிறுவி அவ்வப்போது பராமரித்தல் வேண்டும்.

144– B எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

விளக்கம்.– இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, சாம்பல் நீர் என்பது, இது திரவமாக வழிந்தோடுகிற கழிப்பறை அல்லது சிறுநீர் கழிப்பிடத்திலிருந்து வரும் தண்ணீரைத் தவிர்த்து, மற்றும் குளியல் தொட்டிகள், பீய்ச்சுக் குழாய்கள், கழுவுத் தொட்டிகள், சமையலறை தொட்டிகள், பாத்திரங்கழுவிகள், சலவை இயந்திரங்கள் மற்றும் சலவை தொட்டிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை உள்ளடக்கின்ற சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் என்று பொருள்படும்.".

நோக்கக் காரண விளக்கவுரை.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 144–A பிரிவானது, ஊரக உள்ளாட்சி அமைப்புகளில், மலக்கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மைக்கு வகை செய்கிறது. தற்போது கழிவுநீக்க செயற்பாடானது, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்ட எண் 9/1999), 179–B பிரிவின்கீழ் உரிமம் பெற்ற உரிமதாரர் மட்டுமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இந்தக் கழிவு நீக்க செயல்பாடுகளுக்கு உரிமம் வழங்குவதற்கு கூறப்பட்ட 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் வழிவகை எதுவும் இல்லை. எனவே, ஊராட்சி எல்லைக்குள் கழிவு நீக்க செயற்பாடுகளுக்கான உரிமம் வழங்க ஊராட்சிகளுக்கும் அதிகாரம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கூறப்பட்ட நோக்கத்தை அடைவதற்கு, மேற்கூறப்பட்ட 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் பொருத்தமான வகைமுறைகள் சேர்க்கப்படவேண்டும்.

2. மேலும், சுற்றுசூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது, சாம்பல்நீர் மேலாண்மையை உள்ளடக்கிய திரவக் கழிவு மேலாண்மையை விரிவாக ஈடுபடுத்தி கொள்வதற்காக, 2024 ஆம் ஆண்டு திரவ கழிவு மேலாண்மை விதிகளின் வரைவை முன்மொழிந்துள்ளது. இந்தச் சூழ்நிலையில், சாம்பல்நீர் மேலாண்மை தொடர்பான வகைமுறைகளை, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

3. எனவே, அரசானது கூறப்பட்ட நோக்கத்திற்காக, தமிழ்நாடு சட்டம் 21/1994–ஐ திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

இ. பெரியசாமி,
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2), 2 மற்றும் 3 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை மேற்கொள்வதற்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

இ. பெரியசாமி,
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 அக்டோபர் 17.

கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/2025

2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கான தொரு சட்ட முன்வடிவு.

இந்திய குடியரசின், எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 34/2002.

19 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்), 19 ஆம் பிரிவின், (8) ஆம் உட்பிரிவில், "இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) 175 ஆம் பிரிவு மற்றும் 176 ஆம் பிரிவு" எனும் சொற்றொடருக்காக, "2023 ஆம் ஆண்டு பாரதீய நியாய சன்ஹிதாவின் (மையச் சட்டம் 45/2023) 210 ஆம் பிரிவு மற்றும் 211 ஆம் பிரிவு" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

47 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவானது, அந்த பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும், மற்றும்,–

(1) அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "தண்டனைத்தீர்ப்பின் பேரில், ஆறு மாதம் வரை நீட்டிக்கப்படலாகும் ஒரு கால அளவிற்கு சிறைத்தண்டனையோ அல்லது ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்" எனும் சொற்றொடருக்காக, "பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவிற்குப் பின்பு பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(2) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், ஓர் அலுவலரை அல்லது அதிகாரமைப்பை செயல்பட தடுப்பது அல்லது எதிர்ப்பது தொடர்பான 53–A பிரிவின்கீழான ஒரு நடவடிக்கையில், நீதிமுறையில் தீர்ப்பளிக்கும் அதிகார அமைப்பானது, பொருத்தமெனக் கருதினால், எழுத்து மூலமான காரணங்களைப் பதிவு செய்த பின்பு, வழக்குத் தொடுப்பதற்குப் பரிந்துரைக்கலாம், மற்றும் அந்த நிருவாகி, அதிகார வரம்பு கொண்ட குற்றவியல் நடுவர் முன் அக்குற்ற புகாரைத் தாக்கல் செய்யலாம். தண்டனைத் தீர்ப்பின் பேரில், குற்றவாளிக்கு ஆறு மாதம் வரை நீட்டிக்கலாகும் ஒரு காலஅளவிற்கு சிறைத்தண்டனை வகைகள் இரண்டில் ஒன்று அல்லது பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதம் அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.".

48 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவில், ''தண்டனைத்தீர்ப்பின் பேரில், ஐந்நூறு ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதத்துடனும் மற்றும் அத்தகைய தண்டனைத்தீர்ப்புக்குப் பின்பு நாள் ஒன்றிற்கு ஐம்பது ரூபாய் வரை நீட்டிக்கலாகும் மேலுமான அபராதத்துடன் தண்டிக்கப்படுதல்'' என்ற சொற்றொடருக்காக, ''ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகைக்கு மற்றும் மீறுகை தொடருகின்ற நேர்வில், தண்டத்தொகை விதிக்கப்பட்ட பின்பு, தொடருகின்ற அத்தகைய மீறுகையின் போது நாள் ஒன்றிற்கு ஐந்நூறு ரூபாய் வரை நீட்டிக்கலாகும் கூடுதல் தண்டத்தொகைக்கு உள்ளாதல்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

49, 50, மற்றும் 51 ஆம் பிரிவுகளுக்கான மாற்றீடு.

5. முதன்மைச் சட்டத்தின் 49, 50 மற்றும் 51 ஆம் பிரிவுகளுக்காக, பின்வரும் பிரிவுகளானது, மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"49. நெடுஞ்சாலையில் முறையற்ற ஆக்கிரமிப்பு.— 26 ஆம் பிரிவினை மீறி, நெடுஞ்சாலை எதிலும் ஆக்கிரமிப்பு செய்த அல்லது கையகப்படுத்திய அல்லது 28 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (i) கூறின் கீழ் அவருக்கு சார்வு செய்யப்பட்ட அறிவிக்கைக்கு இணங்கத் தவறிய எவரும், முதல் மீறுகையினைப் பொறுத்து, இரண்டாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்தொகைக்கும், இரண்டாவது அல்லது அடுத்தடுத்த மீறுகையினைப் பொறுத்து, ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்தொகைக்கும் உள்ளாதல் வேண்டும் மற்றும் மீறுகையானது தண்டத்தொகை விதிக்கப்பட்ட பின்பு தொடர்ந்தால், அவ்வாறு தொடர்ந்த மீறுகையின் பேரில், நாள் ஒன்றிற்கு ஐந்நூறு ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் மேலுமான தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்.

விளக்கம்.— இந்த பிரிவு மற்றும் 51 ஆம் பிரிவின் நோக்கத்திற்காக, "இரண்டாவது அல்லது அடுத்தடுத்த மீறுகை" என்பது, தண்டத்தொகை விதிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டு கால அளவிற்குள் ஒரு நபரால் செய்யப்பட்ட ஒரேவகையான அல்லது அதை போன்ற மீறுகை என்று பொருள்படும்.

50. நெடுஞ்சாலைகளுக்கு சேதம் விளைவித்தல்.— 46 ஆம் பிரிவின் வகைமுறைகளை மீறி, நெடுஞ்சாலை எதற்கும் சேதம் எதனையும் விளைவிக்க, அவரது பொறுப்பில் உள்ள வாகனம் அல்லது விலங்கு எதனையும், வேண்டுமென்றே பயன்படுத்துகிற அல்லது அனுமதிக்கிற எவரும், ஒரு இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்:

வரம்புரையாக, மேற்சொன்ன மீறுகை எதனின் தொடர்பான 53—A பிரிவின்கீழான ஒரு நடவடிக்கையில், நீதிமுறையில் தீர்ப்பளிக்கும் அலுவலர், பொருத்தமெனக் கருதினால், எழுத்து மூலமான காரணங்களைப் பதிவு செய்த பின்பு, வழக்குத் தொடுப்பதற்குப் பரிந்துரைக்கலாம், மற்றும் அந்த நிருவாகி, அதிகார வரம்பு கொண்ட குற்றவியல் நடுவர் முன் அக்குற்ற புகாரைத் தாக்கல் செய்யலாம். தண்டனைத் தீர்ப்பின் பேரில், குற்றவாளிக்கு மூன்று மாதம் வரை நீட்டிக்கலாகும் ஒரு காலஅளவிற்கு சிறைத்தண்டனை வகைகள் இரண்டில் ஒன்று அல்லது ஒரு இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

51. குறிப்பாக தண்டத்தொகை வழங்கப்படாத மீறுகைக்கான தண்டத்தொகை.– இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையுமோ அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஆணைகள் எதனையுமோ மீறுகின்ற எவரும், அத்தகைய மீறுகைக்காக, இந்தச் சட்டத்தின்கீழ் பிற தண்டத்தொகை எதுவும் வழங்கப்படாதவிடத்து, முதல் மீறுகையினைப் பொறுத்து, ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகைக்கும் இரண்டாவது அல்லது அடுத்தடுத்த மீறுகையினைப் பொறுத்து இரண்டாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகைக்கும் உள்ளாதல் வேண்டும்.

52–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

6. முதன்மைச் சட்டத்தின் 52 ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

“**52–A. நிறுமங்களால் செய்யப்படும் மீறுகைகள்.–** இச்சட்டத்தின் வகைமுறைகள் எதனின் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் எதனின், மீறுகையானது நிறுமத்தால் செய்யப்பட்டிருக்குமிடத்து, 52 ஆம் பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகளானது, தகுந்த மாறுதல்களுடன் பொருந்துதல் வேண்டும்.”.

53 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

7. முதன்மைச் சட்டத்தின் 53 ஆம் பிரிவிற்காகப் பின்வரும் பிரிவுகளானது, மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

“**53. மீறுகைகளைச் சமரசமாகத் தீர்த்தல்.–(1)** 47 ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவில் (b) கூறு மற்றும் 50 ஆம் பிரிவு தவிர, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின் மீறுகை எதுவும், தீர்ப்பு நடவடிக்கையைத் தொடங்குவதற்கு முன்போ அல்லது பின்போ, ஆனால் தண்டத்தொகை விதிக்கப்படுவதற்கு முன்பு, அவர் குறிப்பிடப்படலாகும் அத்தகைய தொகையைச் செலுத்துவதன்பேரில், நிருவாகியால் சமரசம் செய்யப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, அத்தகைய தொகையானது, எந்நேர்விலும், அந்த மீறுகைக்காக, இந்தச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படலாகும் அதிகபட்ச தண்டத்தொகைக்கு மேற்படுதல் கூடாது.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் மீறுகை சமரசமாக தீர்க்கப்பட்டிருப்பின், அந்த மீறுகை தொடர்பாக, இந்தச் சட்டத்தின்கீழ் வேறு எந்த நடவடிக்கையும் தொடங்கப்படுதலோ அல்லது தொடர்ந்து நடத்தப்படுதலோ கூடாது’’.

53–A. தீர்ப்பளித்தல்.– (1) அரசானது, இந்தச் சட்டத்தின்கீழ் மீறுகைகளைத் தீர்க்கும் மற்றும் தண்டத்தொகைகளைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையின் மூலம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், விசாரணையை நடத்தவும் தண்டத்தொகையை விதிக்கவும், அலுவலர் ஒருவரைத் தீர்ப்பளிக்கும் அலுவலராக நியமனம் செய்யலாம்:

வரம்புரையாக, அரசானது, தேவைப்படலாகிறவாறு, பல தீர்ப்பளிக்கும் அலுவலர்களை நியமனம் செய்யலாம்.

(2) தீர்ப்பளிக்கும் அலுவலரின் கருத்தில், விசாரணையின் பொருட்கூறுகளுக்குப் பயனுள்ளதாக அல்லது அதற்கு தொடர்புடையதாக இருக்கும் எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிக்குமாறு அல்லது சாட்சியம் அளிக்க அல்லது வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை நன்கு அறிந்த நபரெவரையும், தீர்ப்பளிக்கும் அலுவலர், அழைப்பாணை விடுத்து, வருகை தருமாறு கட்டாயப்படுத்தலாம் மற்றும் அத்தகைய விசாரணையின் பேரில், தொடர்புடைய நபர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் மீறியுள்ளார், என அவர் மனநிறைவடைந்தார் எனில், அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய தண்டத்தொகையை விதிக்கலாம்:

வரம்புரையாக, அத்தகைய தண்டத்தொகை எதுவும், விளக்கமளிப்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்காமல் விதிக்கப்படுதலாகாது.

53–B. மேல்முறையீடு.– (1) 53–A பிரிவின்கீழ் தீர்ப்பளிக்கும் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் இடருற்ற நபரெவரும், ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், தமிழ்நாடு அரசிதழில் அரசால் அறிவிக்கை செய்யப்படலாகிற மேல்முறையீட்டு அலுவலரிடம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மேல்முறையீடு செய்யலாம்:

வரம்புரையாக, மேல்முறையீட்டாளர், அந்தக் காலஅளவிற்குள் மேல்முறையீடு செய்யாமலிருப்பதற்குப் போதிய காரணம் இருந்திருக்கிறது என மேல்முறையீட்டு அலுவலரை மனநிறைவடையச் செய்தால், அறுபது நாள் காலஅளவு கழிந்த பின்பு மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(2) மேல்முறையீட்டு அலுவலரானவர், மேல்முறையீட்டின் தரப்பினருக்கு விளக்கமளிப்பதற்கான வாய்பொன்றை வழங்கிய பின்பு, அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(3) மேல்முறையீட்டு அலுவலரானவர், மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் அதனை முடித்து வைத்தல் வேண்டும்.

53–C. வசூலித்தல்.– நேர்விற்கேற்ப, 53–A ஆம் பிரிவு அல்லது 53–B பிரிவின்கீழ் தண்டத்தொகை விதிக்கப்பட்டிருப்பின், அது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வைப்பீடு செய்யப்படவில்லையெனில், செலுத்தவேண்டிய தொகையானது, நிலவருவாயின் நிலுவைத் தொகையை வசூலிப்பது போன்று வசூலிக்கப்படுதல் வேண்டும்.''.

8. முதன்மைச் சட்டத்தின் 62 ஆம் பிரிவில், "இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (மையச் சட்டம் XLV/1860)" எனும் சொற்றொடருக்காக, "2023 ஆம் ஆண்டு பாரதீய நியாய சன்ஹிதாவின் (மையச் சட்டம் 45/2023) 2 ஆம் பிரிவின், (28) ஆம் கூறின்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

62 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

நோக்கக் காரண விளக்கவுரை.

தமிழ்நாடு அரசானது, வணிகம் செய்வதை எளிதாக்குதல் மற்றும் வாழ்க்கை முறையை எளிதாக்குதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும், தேவையற்ற வழக்குகளை நீக்கி, ஒழுங்குமுறை நடைமுறைகளை எளிமைப்படுத்துவதன் மூலம், மாநிலத்தை உலகளவில் மிகவும் முன்னுரிமையளிக்கப்படும் முதலீட்டு இடமாக மாற்றுவதற்கும் உறுதி பூண்டுள்ளது. மேற்கண்ட இலக்கை எய்த, தமிழ்நாடு அரசானது, நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க மற்றும் வணிகம் செய்வதை எளிதாக்கும் வகையில், சட்டமியற்றுதலில் பல்வேறு சீர்திருத்தங்களை செயல்படுத்த உண்மையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

2. வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கும், வாழ்க்கையை எளிதாக்குவதற்கும், நம்பிக்கை அடிப்படையிலான நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், குறித்தசில சிறு குற்றங்கள் மற்றும் நடைமுறை குறைபாடுகளை குற்றமற்றதாக்குவதும், நீதிமன்றங்களில் வழக்குத் தொடருவதன் மூலம் விதிக்கப்படும் சிறைத்தண்டனை மற்றும் அபராதம் போன்ற குற்றவியல் தண்டனைகளுக்குப் பதிலாக நிருவாக தீர்ப்பு செயல்முறை மூலம் பணம்சார்ந்த உரிமையியல் தண்டத்தொகைகள் விதிப்பதும் கட்டாயமாகும். அதற்கிணங்கியவாறு, அரசானது, 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தைக் (தமிழ்நாடு சட்டம் 34/2002) கூறப்பட்ட நோக்கத்திற்காக, தகுந்தவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

எ.வ. வேலு,
பொதுப்பணித் துறை அமைச்சர்.

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2) மற்றும் 7 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை மேற்கொள்வதற்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

எ.வ. வேலு,
பொதுப்பணித் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 அக்டோபர் 17.

கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130-ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/2025

1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரிய (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 4/1996.

96 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) 96 ஆம் பிரிவில், ''இந்தியத் தண்டனைச் சட்டத்தொகுப்பின் (மையச் சட்டம் XLV/1860) 21 ஆம் பிரிவு'' எனும் சொற்றொடருக்காக, ''2023 ஆம் ஆண்டு பாரதீய நியாய சன்ஹிதாவின் (மையச் சட்டம் 45/2023) 2 ஆம் பிரிவின் (28) ஆம் கூறு'' என்ற சொற்றொடரனது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

3. முதன்மை சட்டத்தின் 97 மற்றும் 98 ஆம் பிரிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் பிரிவுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

97 மற்றும் 98 ஆம் பிரிவுகளுக்கான மாற்றீடு.

"97. 27, 28, 29 மற்றும் 30 ஆம் பிரிவுகளின் மீறுகைக்கான தண்டத்தொகை.– நபர் எவரும், 27 ஆம் பிரிவு அல்லது 28 ஆம் பிரிவு அல்லது 29 ஆம் பிரிவின்படி செய்யப்பட்ட ஆணை எதனையும் மீறுவாராயின் அல்லது 30 ஆம் பிரிவின்படி விதிக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனைக்கு இணங்கி நடக்க தவறுவாராயின், முதல் மீறுகையைப் பொறுத்து, ஒரு இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகைக்கும், இரண்டாம் அல்லது தொடர்ச்சியான மீறுகையைப் பொறுத்து, மூன்று இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும். மேலும் தண்டத்தொகை விதிக்கப்பட்ட பின்பும் மீறுகை தொடரும் நேர்வில், அத்தகைய மீறுகை தொடர்கின்ற வரையில், நாள் ஒவ்வொன்றுக்கும் ஐந்நூறு ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் கூடுதல் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்.

விளக்கம்.— இந்த பிரிவின் மற்றும் 98 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, ''இரண்டாவது அல்லது தொடர்ச்சியான மீறுகை'' என்பது, தண்டத்தொகை விதிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலஅளவிற்குள் ஒரு நபரால் செய்யப்பட்ட ஒரே வகையான அல்லது அதை போன்ற மீறுகை என்று பொருள்படும்.

98. சரக்குத்துறைகள், கப்பல்துறைகள் முதலியவற்றை அனுமதியின்றி நிறுவுவதற்கான தண்டத்தொகை.– (1) நபர் எவரும், 35 ஆம் பிரிவின் வகைமுறைகளை மீறுவாராயின், இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும். மேலும், தண்டத்தொகை விதிக்கப்பட்ட பின்பும், மீறுகை தொடரும் நேர்வில், அத்தகைய மீறுகை தொடர்கின்ற வரையில் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐந்நூறு ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் கூடுதல் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்.

(2) நபரெவரும், (1) ஆம் உட்பிரிவின் கீழான மீறுகைக்காக தண்டத்தொகை விதிக்கப்பட்ட பிறகு, இரண்டாம் அல்லது தொடர்ச்சியான மீறுகையைச் செய்தால், ஒரு இலட்சம் ரூபாய்க்கு குறையாத, ஆனால் மூன்று இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும். அத்தகைய மீறுகை தொடரப்படும் நேர்வில், அத்தகைய மீறுகை தொடர்கின்ற வரையில் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐந்நூறு ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் கூடுதல் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்.''.

4. முதன்மை சட்டத்தின் 99 ஆம் பிரிவில், ''குறைந்தபட்சம் ஐம்பது ரூபாய்க்கு உட்பட்டு, அவ்வாறு கொடுபட வேண்டியத் தீர்வைத் தொகைக்கு இரட்டிப்பு அளவிலான பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்'' எனும் சொற்றொடருக்காக, ''அதிகபட்சம் இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு உட்பட்டு, அவ்வாறு கொடுபட வேண்டிய தொகையின் வீதத்திற்கு இரட்டிப்பு அளவிலான தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்'' என்ற சொற்றொடரனது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 99 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மை சட்டத்தின் 101 ஆம் பிரிவில், ''இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV /1860) 168 ஆம் பிரிவு'' எனும் சொற்றொடருக்காக, ''2023 ஆம் ஆண்டு பாரதீய நியாய சன்ஹிதாவின் (மையச் சட்டம். 45/2023) 202 ஆம் பிரிவு'' எனும் சொற்றொடரனது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 101 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மை சட்டத்தின் 102 ஆம் பிரிவில்,– 102 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத் தலைப்பில், ''பிற குற்றங்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''பிற மீறுகைகள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) ''இருநூறு ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதத்துடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்'' எனும் சொற்றொடருக்காக, ''இருபத்தைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்'' எனும் சொற்றொடரனது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

7. முதன்மை சட்டத்தின் 102 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவுகளானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— 102–A,102–B, 102–C மற்றும் 102–D எனும் புதிய பிரிவுகளை உட்புகுத்தப்படுதல்

''102–A. மீறுகைகளைச் சமரசமாகத் தீர்த்தல்:–

(1) 97, 98 , 99 , 102 அல்லது 110 ஆம் பிரிவின்கீழ் தண்டத்தொகைக்கு உள்ளாகக் கூடிய மீறுகை எதுவும், தீர்ப்பு நடவடிக்கையைத் தொடங்குவதற்கு முன்போ அல்லது பின்போ, ஆனால் தண்டத்தொகை விதிக்கப்படுவதற்கு முன்பு, அத்தகைய அலுவலர் குறிப்பிடலாகும் அத்தகைய தொகையைச் செலுத்துவதன் பேரில், தமிழ்நாடு அரசிதழில், அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும், அத்தகைய அலுவலரால் சமரசம் செய்யப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, அத்தகைய தொகையானது, எந்நேர்விலும், அந்த மீறுகைக்காக, இந்தச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படக்கூடிய குறைந்தபட்ச தண்டத்தொகை ஏதேனுமிருப்பின் அதற்கு குறைவாகவும் அல்லது அதிகபட்ச தண்டத்தொகையை விட அதிகமாக இருத்தல் கூடாது.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் மீறுகை சமரசமாகத் தீர்க்கப்பட்டிருப்பின், அந்த மீறுகை தொடர்பாக, இந்தச் சட்டத்தின் கீழ் வேறு எந்த நடவடிக்கையும் தொடங்கப்படுதலோ அல்லது தொடர்ந்து நடத்தப்படுதலோ கூடாது.

102–B. தீர்ப்பளித்தல்.– (1) அரசானது, இந்தச் சட்டத்தின்கீழ் மீறுகைகளைத் தீர்க்கும் மற்றும் தண்டத்தொகைகளைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையின் மூலம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், விசாரணையை மேற்கொண்டு மற்றும் தண்டத்தொகையை விதிப்பதற்கு, அலுவலர் ஒருவரைத் தீர்ப்பளிக்கும் அலுவலராக நியமனம் செய்யலாம்:

வரம்புரையாக, அரசானது, தேவைப்படலாகிறவாறு, பல தீர்ப்பளிக்கும் அலுவலர்களை நியமனம் செய்யலாம்.

(2) தீர்ப்பளிக்கும் அலுவலரின் கருத்தில், விசாரணையின் பொருட்கூறுகளுக்குப் பயனுள்ளதாக அல்லது அதற்கு தொடர்புடையதாக இருக்கும் எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிக்குமாறு அல்லது சாட்சியம் அளிக்க அல்லது வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை நன்கு அறிந்த நபரெவரையும், தீர்ப்பளிக்கும் அலுவலர், அழைப்பாணை விடுத்து, வருகை தருமாறு கட்டாயப்படுத்தலாம் மற்றும் அத்தகைய விசாரணையின் பேரில், தொடர்புடைய நபர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதற்கும் இணங்கத் தவறியுள்ளார், என அவர் மனநிறைவடைந்தார் எனில், அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய தண்டத்தொகையை விதிக்கலாம்:

வரம்புரையாக, அத்தகைய தண்டத்தொகை எதுவும், விளக்கமளிப்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்காமல் விதிக்கப்படுதல் ஆகாது.

102–C. மேல்முறையீடு.– (1) 102–B பிரிவின்கீழ் தீர்ப்பளிக்கும் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் இடருற்ற நபரெவரும், ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், ***தமிழ்நாடு அரசிதழில்*** அரசால் அறிவிக்கை செய்யப்படலாகிற மேல்முறையீட்டு அலுவலரிடம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மேல்முறையீடு செய்யலாம்.

வரம்புரையாக, மேல்முறையீட்டாளர், அந்தக் காலஅளவிற்குள் மேல்முறையீடு செய்யாமலிருப்பதற்குப் போதிய காரணம் இருந்திருக்கிறது என மேல்முறையீட்டு அலுவலரை மனநிறைவடையச் செய்தால், அறுபது நாள் காலஅளவு கழிந்த பின்பு மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(2) மேல்முறையீட்டு அலுவலரானவர், மேல்முறையீட்டின் தரப்பினருக்கு விளக்கமளிப்பதற்கான வாய்ப்பொன்றை வழங்கிய பின்பு, அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(3) மேல்முறையீட்டு அலுவலரானவர், மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் அதனை முடித்து வைத்தல் வேண்டும்.

102–D. வசூலித்தல்.– நேர்விற்கேற்ப, 102–B பிரிவு அல்லது 102–C பிரிவின்கீழ் தண்டத்தொகை விதிக்கப்பட்டிருப்பின், அது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வைப்பீடு செய்யப்படவில்லையெனில், செலுத்த வேண்டிய தொகையானது, நிலவருவாயின் நிலுவைத் தொகையை வசூலிப்பது போன்று வசூலிக்கப்படுதல் வேண்டும்.

103 ஆம் பிரிவை விட்டுவிடுதல்.

8. முதன்மை சட்டத்தின் 103 ஆம் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

9. முதன்மை சட்டத்தின் 104 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

104 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

"**104. நிறுமங்களால் செய்யப்படும் மீறுகை.**— (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனின் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதி, ஒழுங்குமுறை விதிகள் அல்லது ஆணை எதனின்கீழ் மீறுகை எதுவும் நிறுமத்தால் செய்யப்பட்டிருப்பின், அம்மீறுகையின்போது, அந்நிறுமத்தின் அலுவல் நடைபெறுவதற்கு அந்நிறுமத்தின் பொறுப்பிலிருந்த மற்றும் பொறுப்பைக் கொண்டிருந்த நபர் ஒவ்வொருவரும், அந்நிறுமம் அம்மீறுகையை செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின்கீழ் குறிப்பிடப்படலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்:

வரம்புரையாக, இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய நபர் எவரும், தமக்குத் தெரியாமலேயே அம்மீறுகை செய்யப்பட்டிருப்பதாக அல்லது அத்தகைய மீறுகையைத் தடுக்க தம்மால் இயன்ற அனைத்தையும் செய்ததாக மெய்ப்பித்தால், அத்தகைய நபருக்கு இந்தச் சட்டத்தின்கீழ் வகைசெய்யப்பட்டுள்ள தண்டத்தொகைக்கு உள்ளாதல் ஆகாது.

(2) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழான மீறுகை எதனையும் நிறுமமொன்று செய்திருக்கிறவிடத்து, அந்த மீறுகையானது, அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் இசைவுடன் அல்லது உடந்தையுடன் அல்லது அவருடைய கவனமின்மை காரணமாக செய்யப்பட்டிருப்பதாக மெய்ப்பிக்கப்பட்டால், அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர், அல்லது பிற அலுவலர் அந்த மீறுகையைச் செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின்கீழ் குறிப்பிடப்படலாகும் தண்டத்தொகைக்கு உள்ளதால் வேண்டும்.

விளக்கம்.— இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,—

(a) "நிறுமம்" என்பது, எந்தவொரு கூட்டு நிறுவனம் என்று பொருள்படும் மற்றும் ஒரு பொறுப்புக்கட்டளை, ஒரு நிறுவகம், சங்கம் அல்லது பிற தனி நபர்களின் கழகத்தையும் உள்ளடக்கும்; மற்றும்

(b) "இயக்குநர்" என்பவர்,—

(i) ஒரு நிறுவகத்தைப் பொறுத்தவரையில், அந்நிறுவகத்தின் ஒரு பங்குதாரர் ஆவார்,

(ii) ஒரு சங்கம், ஒரு பொறுப்புக்கட்டளை அல்லது பிற தனி நபர்களின் கழகம் என்பது சங்கம், பொறுப்புக்கட்டளை அல்லது பிற தனி நபர்களின் கழகத்தின் விதிகளின்கீழ், நேர்விற்கேற்ப, சங்கம், பொறுப்புக்கட்டளை அல்லது பிற தனி நபர்களின் கழகத்தின் விவகாரங்களை மேலாண்மை செய்வதற்காக பொறுப்பளிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்.".

10. முதன்மை சட்டத்தின் 110 ஆம் பிரிவின், (2) ஆம் உட்பிரிவில், "இருநூறு ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் அபராதத்துடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் முதல் நாளுக்குப் பின்னர் அத்தகைய மீறுகை தொடர்கின்ற வரையில் நாள் ஒவ்வொன்றுக்கும் ஐம்பது ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் அபராதத்துடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்" எனும் சொற்றொடருக்காக, "இருபத்தைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும். மேலும், தண்டத்தொகை விதிக்கப்பட்ட பின்பும் அத்தகைய மீறுகை தொடரப்படும் நேர்வுகளில், அத்தகைய மீறுகை தொடர்கின்ற வரையில் நாள் ஒவ்வொன்றுக்கும் இரு நூறு ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் கூடுதல் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்" எனும் சொற்றொடரனது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

110 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

நோக்கக் காரண விளக்கவுரை.

தமிழ்நாடு அரசானது, வணிகம் செய்வதை எளிதாக்குதல் மற்றும் வாழ்க்கை முறையை எளிதாக்குதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும், தேவையற்ற வழக்குகளை நீக்கி, ஒழுங்குமுறை நடைமுறைகளை எளிமைப்படுத்துவதன் மூலம், மாநிலத்தை உலகளவில் மிகவும் முன்னுரிமையளிக்கப்படும் முதலீட்டு இடமாக மாற்றுவதற்கும் உறுதி பூண்டுள்ளது. மேற்கண்ட இலக்கை எய்த, தமிழ்நாடு அரசானது, நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க மற்றும் வணிகம் செய்வதை எளிதாக்கும் வகையில், சட்டமியற்றுதலில் பல்வேறு சீர்திருத்தங்களை செயல்படுத்த உண்மையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

2. வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கும், வாழ்க்கையை எளிதாக்குவதற்கும், நம்பிக்கை அடிப்படையிலான நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், குறித்தசில சிறு குற்றங்கள் மற்றும் நடைமுறை குறைபாடுகளை குற்றமற்றதாக்குவதும், நீதிமன்றங்களில் வழக்குத் தொடருவதன் மூலம் விதிக்கப்படும் சிறைத்தண்டனை மற்றும் அபராதம் போன்ற குற்றவியல் தண்டனைகளுக்குப் பதிலாக நிருவாக தீர்ப்பு செயல்முறை மூலம் பணம்சார்ந்த உரிமையியல் தண்டத்தொகைகள் விதிப்பதும் கட்டாயமாகும். அதற்கிணங்கியவாறு, அரசானது, 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தைக் (தமிழ்நாடு சட்டம் 4/1996) கூறப்பட்ட நோக்கத்திற்காக, தகுந்தவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

எ.வ.வேலு,
பொதுப்பணித் துறை அமைச்சர்.

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2) மற்றும் 7 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை மேற்கொள்வதற்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

எ.வ.வேலு,
பொதுப்பணித் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 அக்டோபர் 17.

கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/2025

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்திய குடியரசின், எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையில் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் நுகர்வு அல்லது விற்பனை மீதான வரி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கக் கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 12/2003.

12 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான), 12 ஆம் பிரிவின், (2) ஆம் உட்பிரிவில் ‘‘இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) 21 ஆம் பிரிவு’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘2023 ஆம் ஆண்டு பாரதீய நியாய சன்ஹிதாவின் (மையச் சட்டம் 45/2023) 2 ஆம் பிரிவின் (28) ஆம் கூறு’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

13 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின், (2) ஆம் உட்பிரிவில், ‘‘1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டம் (மையச் சட்டம் 2/1974)’’ எனும் சொற்றொடருக்காக, ’’2023 ஆம் ஆண்டு பாரதீய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா (மையச் சட்டம் 46/2023)’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

17–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

4. முதன்மை சட்டத்தின் 17 ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

‘‘**17–A. நிறுமங்களால் செய்யப்படும் மீறுகைகள்.–** இச்சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் அல்லது இதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் எதனையும், ஒரு நிறுவனம் மீறுகை செய்கிறவிடத்து, தகுந்த மாறுதல்களுடன் 17 ஆம் பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகளானது பொருந்துதல் வேண்டும்.‘‘.

19 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. (1) முதன்மை சட்டத்தின் 19 ஆம் பிரிவானது, அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும்;

(2) அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், ''பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதத்துடன் தண்டித்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாகுதல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) அவ்வாறு திருத்தப்பட்ட (1) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(2) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், 19–B ஆம் பிரிவின்கீழ் ஒரு நடவடிக்கையில் நீதிமுறையில் தீர்ப்பளிக்கும் அலுவலர் பொருத்தமெனக் கருதினால், அவர் எழுத்து மூலமான காரணங்களைப் பதிவு செய்த பிறகு, வழக்குத் தொடுப்பதற்குப் பரிந்துரைக்கலாம், மேலும் அரசால் அறிவிக்கப்படலாகும் அத்தகைய அலுவலர், அதிகார வரம்பு கொண்ட குற்றவியல் நடுவர் முன்பு புகார் ஒன்றைத் தாக்கல் செய்யலாம். தீர்ப்புத் தண்டனையின் பேரில், குற்றவாளிக்கு மூன்று மாதம் வரை நீட்டிக்கக்கூடிய சிறைத்தண்டனை அல்லது ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கக்கூடிய அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படுதல் வேண்டும்.''.

19–A, 19–B, 19–C மற்றும் 19–D எனும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

6. அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட முதன்மை சட்டத்தின் 19ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவுகளானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:–

''**19–A. மீறுகைகளைச் சமரசமாக தீர்த்தல்.–** (1) 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி தண்டத்தொகைக்கு உள்ளாகும் மீறுகை எதுவும், தீர்ப்பு நடவடிக்கையைத் தொடங்குவதற்கு முன்போ அல்லது பின்போ, ஆனால் தண்டத்தொகை விதிக்கப்படுவதற்கு முன்பு, அந்த அலுவலரால் குறிப்பிடப்படலாகும் அத்தகைய தொகையைச் செலுத்துவதன்பேரில் ***தமிழ்நாடு அரசிதழில்*** அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகைய அலுவலரால் சமரசம் செய்யப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, அத்தகைய தொகையானது, எந்நேர்விலும், அந்த மீறுகைக்காக, இந்தச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படலாகும் அதிகபட்ச தண்டத்தொகைக்கு மேற்படுதல் கூடாது.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் மீறுகை சமரசமாக தீர்க்கப்பட்டிருப்பின், அந்த மீறுகை தொடர்பாக, இந்தச் சட்டத்தின்கீழ் வேறு எந்த நடவடிக்கையும் தொடங்கப்படுதலோ அல்லது தொடர்ந்து நடத்தப்படுதலோ கூடாது.

19–B. தீர்ப்பளித்தல்.– (1) அரசானது, இந்தச் சட்டத்தின்கீழ் மீறுகைகளைத் தீர்க்கும் மற்றும் தண்டத்தொகைகளைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கையின் மூலம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், விசாரணையை நடத்தவும், தண்டத்தொகையை விதிக்கவும், அலுவலர் ஒருவரைத் தீர்ப்பளிக்கும் அலுவலராக நியமனம் செய்யலாம்:

வரம்புரையாக, அரசானது, தேவைப்படலாகிறவாறு, பல தீர்ப்பளிக்கும் அலுவலர்களை நியமனம் செய்யலாம்.

(2) தீர்ப்பளிக்கும் அலுவலரின் கருத்தில், சாட்சியம் அளிக்க அல்லது வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை நன்கு அறிந்த நபரெவரையும், விசாரணையின் பொருட்கூறுகளுக்குப் பயனுள்ளதாக அல்லது அதற்கு தொடர்புடையதாக இருக்கும் எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிக்குமாறு தீர்ப்பளிக்கும் அலுவலர், அழைப்பாணை விடுத்து, வருகை தருமாறு கட்டாயப்படுத்தலாம் மற்றும் அத்தகைய விசாரணையின் பேரில், தொடர்புடைய நபர், 19 ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள வகைமுறைகள் எதனையும் இணங்கத் தவறியுள்ளார், என அவர் மனநிறைவடைந்தார் எனில், அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய தண்டத்தொகையை விதிக்கலாம்:

வரம்புரையாக, அத்தகைய தண்டத்தொகை எதுவும், விளக்கமளிப்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்காமல் விதிக்கப்படுதலாகாது.

19–C. மேல்முறையீடு.– (1) 19–B ஆம் பிரிவின்கீழ் தீர்ப்பளிக்கும் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் இடருற்ற நபரெவரும், ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், ***தமிழ்நாடு அரசிதழில்*** அரசால் அறிவிக்கை செய்யப்படலாகிற மேல்முறையீட்டு அலுவலரிடம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மேல்முறையீடு செய்யலாம்:

வரம்புரையாக, மேல்முறையீட்டாளர், அந்தக் காலஅளவிற்குள் மேல்முறையீடு செய்யாமலிருப்பதற்குப் போதிய காரணம் இருந்திருக்கிறது என மேல்முறையீட்டு அலுவலரை மனநிறைவடையச் செய்தால், அறுபது நாள் காலஅளவு கழிந்த பின்பு மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(2) மேல்முறையீட்டு அலுவலரானவர், மேல்முறையீட்டின் தரப்பினருக்கு விளக்கமளிப்பதற்கான வாய்பொன்றை வழங்கிய பின்பு, அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(3) மேல்முறையீட்டு அலுவலரானவர், மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் அதனை முடித்து வைத்தல் வேண்டும்.

19–D. வசூலித்தல்.– நேர்விற்கேற்ப, 19–B ஆம் பிரிவு அல்லது 19–C ஆம் பிரிவின்கீழ் தண்டத்தொகை விதிக்கப்பட்டிருப்பின், அது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வைப்பீடு செய்யப்படவில்லையெனில், செலுத்தவேண்டிய தொகையானது, நிலவருவாயின் நிலுவைத் தொகையை வசூலிப்பது போன்று வசூலிக்கப்படுதல் வேண்டும்.''.

நோக்கக் காரண விளக்கவுரை.

தமிழ்நாடு அரசானது, வணிகம் செய்வதை எளிதாக்குதல் மற்றும் வாழ்க்கை முறையை எளிதாக்குதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும், தேவையற்ற வழக்குகளை நீக்கி, ஒழுங்குமுறை நடைமுறைகளை எளிமைப்படுத்துவதன் மூலம், மாநிலத்தை உலகளவில் மிகவும் முன்னுரிமையளிக்கப்படும் முதலீட்டு இடமாக மாற்றுவதற்கும் உறுதி பூண்டுள்ளது. மேற்கண்ட இலக்கை எய்த, தமிழ்நாடு அரசானது, நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க மற்றும் வணிகம் செய்வதை எளிதாக்கும் வகையில், சட்டமியற்றுதலில் பல்வேறு சீர்திருத்தங்களை செயல்படுத்த உண்மையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

2. வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கும், வாழ்க்கையை எளிதாக்குவதற்கும், நம்பிக்கை அடிப்படையிலான நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், குறித்தசில சிறு குற்றங்கள் மற்றும் நடைமுறை குறைபாடுகளை குற்றமற்றதாக்குவதும், நீதிமன்றங்களில் வழக்குத் தொடருவதன் மூலம் விதிக்கப்படும் சிறைத்தண்டனை மற்றும் அபராதம் போன்ற குற்றவியல் தண்டனைகளுக்குப் பதிலாக நிருவாக தீர்ப்பு செயல்முறை மூலம் பணம்சார்ந்த உரிமையியல் தண்டத்தொகைகள் விதிப்பதும் கட்டாயமாகும். அதற்கிணங்கியவாறு, அரசானது, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டத்தைக் (தமிழ்நாடு சட்டம் 12/2003) கூறப்பட்ட நோக்கத்திற்காக, தகுந்தவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

சா.சி.சிவசங்கர்,
போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2), 5 மற்றும் 6 ஆம் கூறுகளில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை மேற்கொள்வதற்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

சா.சி.சிவசங்கர்,
போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 அக்டோபர் 17.

கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/2025

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

35 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 22/ 1959.

2. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) 35 ஆம் பிரிவில்,–

(1) ஓரத்தலைப்பிற்காக, பின்வரும் ஓரத்தலைப்பானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“செலவு செய்வதற்கு அறங்காவலருக்குள்ள அதிகாரம்”

(2) (1) ஆம் உட்பிரிவில், (b) கூறுக்கு பின்பு, பின்வரும் கூறுகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

(c) அர்ச்சகர்கள், இசை கலைஞர்கள், ஓதுவார்கள், அத்யாபகர்கள், வேதபாராயணிகர்கள் ஆகியோர்களுக்கான பயிற்சிப் பள்ளிகளை அமைத்தல்;

(d) இந்து மதம், பண்பாடு மற்றும் ஆன்மீகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளைப் பரப்புவதற்கான மையங்களை நிறுவுதல்;

(e) சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துகளின் மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும், அத்தகைய நோக்கங்களுக்கு ஏற்ப கட்டடங்களைக் கட்டுதல், சமய நிறுவன பக்தர்களுக்கு நலப் பயன் அளித்தல்;

(f) சமய நிறுவன பக்தர்களின் நலனுக்காக, கல்வி நிறுவனம் எதனையும் நிறுவுதலும், பராமரித்தலும்; மற்றும்

(g) சமய நிறுவனங்களின் பக்தர்களின் நலனுக்கான எந்தவொரு நோக்கத்திற்கும்.”.

46 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மை சட்டத்தின் 46 ஆம் பிரிவில்,—

(1) (i), (ii) மற்றும் (iii) கூறுகளுக்காக, பின்வரும் கூறுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(i) ஒரு இலட்சம் ரூபாய்க்கு குறையாமலும், ஆனால் பத்து லட்சம் ரூபாய்க்கு குறைவாகவும் இருக்க வேண்டும்;

(ii) பத்து லட்சம் ரூபாய்க்கு குறையாமலும், ஆனால் ஐந்து கோடி ரூபாய்க்குக் குறைவாகவும் இருக்க வேண்டும்;

(iii) ஐந்து கோடி ரூபாய்க்கு குறையாது,'';

(2) முதலாம் வரம்புரை, ''பத்தாயிரம் ரூபாய்'' எனும் சொற்றொடருக்காக, ''ஒரு இலட்சம் ரூபாய்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

86 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மை சட்டத்தின் 86 ஆம் பிரிவில்,—

(1) (1) ஆம் உட்பிரிவில், ''மார்ச்'' மற்றும் ''பசலி ஆண்டு'' எனும் சொற்றொடருக்காக முறையே, ''திசம்பர்'' மற்றும் ''நிதி ஆண்டு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (5) ஆம் உட்பிரிவில், ''பசலி ஆண்டு'' எனும் சொல்லுக்காக, ''நிதி ஆண்டு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (6) ஆம் உட்பிரிவில், ''பசலி ஆண்டு'' எனும் சொல்லுக்காக, அது காணப்படுகிற இரண்டு இடங்களில், ''நிதி ஆண்டு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

87 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மை சட்டத்தின் 87 ஆம் பிரிவில்,—

(1) (1) ஆம் உட்பிரிவில், ''பசலி ஆண்டு'' எனும் சொல்லுக்காக, ''நிதி ஆண்டு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (2) ஆம் உட்பிரிவில், ''இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (மையச் சட்டம் XLV/1860)'' எனும் சொற்றொடருக்காக, ''2023 ஆம் ஆண்டு பாரதீய நியாய சன்ஹிதாவின் (மையச் சட்டம் 45/2023) 2 ஆம் பிரிவின், (28) ஆம் கூறின்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) (3) ஆம் உட்பிரிவில்,—

(a) ''பசலி ஆண்டு'' எனும் சொல்லுக்காக, அது காணப்படுகிற இரண்டு இடங்களில், ''நிதி ஆண்டு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) ''ஐந்து இலட்சம் ரூபாய்'' எனும் சொற்றொடருக்காக, ''ஐம்பது இலட்சம் ரூபாய்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(4) (4) ஆம் உட்பிரிவில், ''பசலி ஆண்டு'' எனும் சொல்லுக்காக, ''நிதி ஆண்டு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

6. முதன்மை சட்டத்தின் 88 ஆம் பிரிவில்,— 88 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில், "பசலி ஆண்டு" எனும் சொல்லுக்காக, "நிதி ஆண்டு" எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (a) கூறுக்காக, பின்வரும் கூறு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(a) ஆணையருக்கு,—

(i) மடங்கள் மற்றும் மடங்களுடன் இணைந்த குறிப்பிட்ட அறக்கட்டளைகள் தொடர்பாக; மற்றும்

(ii) உதவி ஆணையர், துணை ஆணையர், இணை ஆணையர் அல்லது கூடுதல் ஆணையர் ஆகிய பதவிகளில் நிருவாக அலுவலர் நிலையைக் கொண்ட சமய நிறுவனங்கள் தொடர்பாக,";

(3) (b) கூறுக்குப் பின்பு, "46 ஆம் பிரிவு" எனும் சொல்லுக்குப்பின்பு "(a) கூறின் கீழ் உள்ளடக்கப்பட்ட நிறுவனங்கள் தவிர" எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

7. முதன்மை சட்டத்தின் 92 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், "பசலி ஆண்டு" எனும் சொல்லுக்காக, "நிதி ஆண்டு" எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 92 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

8. முதன்மை சட்டத்தின் 95 ஆம் பிரிவில், "அந்தப் பசலியை ஒட்டிமுந்திய மூன்று பசலிகளுக்குமேல்" எனும் சொற்றொடருக்காக "அந்த நிதி ஆண்டை ஒட்டிமுந்திய மூன்று நிதி ஆண்டுகளுக்குமேல்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 95 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

நோக்கக் காரண விளக்கவுரை.

பல்வேறு சமய நிறுவனங்களுக்கு, குறிப்பிட்ட சமய நோக்கங்களுக்காக வழங்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட அசையாச் சொத்துக்கள் பல, பயன்பாடின்றி, பயனற்றவையாகவே உள்ளன. அந்த மதிப்பு மிக்க சொத்துகளைப் பயன்படுத்துவதற்கும், அவற்றிலிருந்து கிடைக்கும் வருவாயை அவை வழங்கப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்பட்ட சமயம் சார்ந்த நோக்கங்களுக்காகவும் அந்தந்த சமய நிறுவனங்களை முறையாக பராமரிப்பதற்கும், அந்த அசையாச் சொத்துகளின் மீது கட்டடங்கள் கட்டுவதன் மூலம் அவற்றை மேம்படுத்தி வளர்ப்பது மிகவும் அவசியமாகும், ஒரு சமய நிறுவனத்தின் அறங்காவலர்கள், தங்கள் பொறுப்பிலுள்ள நிதியைப் பயன்படுத்தி, சொத்துகளை மேம்படுத்த, குறிப்பாக அதிகாரம் அளிக்கும் வகைமுறைகள் இல்லாத காரணத்தினால், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தில், (தமிழ்நாடு சட்டம் 22/1959) திருத்தம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது

2. சமய நிறுவனங்களால் கல்வி நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் மற்றும் அர்ச்சகர்கள், இசை கலைஞர்கள், ஓதுவார்கள், அத்யாபகர்கள், வேதபாராயணிகர்கள் ஆகியோருக்கான பயிற்சிப் பள்ளிகளை நிறுவுவதற்கு மேற்கூறிய சட்டத்தில் பொருத்தமான ஒரு வகைமுறையைச் சேர்ப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

பி.கே. சேகர்பாபு,
இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 அக்டோபர் 17.

கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/2025

2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிலையங்களில் சேர்க்கைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிலையங்களில் சேர்க்கை (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கக் கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 3/2007.

9 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிலையங்களில் சேர்க்கைச் சட்டத்தின், (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 9 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், "ஐந்து இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் அபராதத்துடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்" எனும் சொற்றொடருக்காக, "பத்து இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

9–A, 9–B, 9–C மற்றும் 9–D எனும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

3. முதன்மைச் சட்டத்தின், 9 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அவைகளாவன,—

"9–A. மீறுகைகளைச் சமரசமாகத் தீர்த்தல்.— (1) 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி தண்டத்தொகைக்கு உள்ளாகும் மீறுகை எதுவும், தீர்ப்பு நடவடிக்கையைத் தொடங்குவதற்கு முன்போ அல்லது பின்போ, ஆனால் தண்டத்தொகை விதிக்கப்படுவதற்கு முன்பு, அந்த அலுவலர் குறிப்பிடப்படலாகும் அத்தகைய தொகையைச் செலுத்துவதன்பேரில் தமிழ்நாடு அரசிதழில் அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகைய அலுவலரால் சமரசம் செய்யப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, அத்தகைய தொகையானது, எந்நேர்விலும், அந்த மீறுகைக்காக, இந்தச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படலாகும் அதிகபட்ச தண்டத்தொகைக்கு மேற்படுதல் கூடாது.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் மீறுகை சமரசமாகத் தீர்க்கப்பட்டிருப்பின், அந்த மீறுகை தொடர்பாக, இந்தச் சட்டத்தின்கீழ் வேறு எந்த நடவடிக்கையும் தொடங்கப்படுதலோ அல்லது தொடர்ந்து நடத்தப்படுதலோ கூடாது.

9–B. தீர்ப்பளித்தல்.— (1) அரசானது, இந்தச் சட்டத்தின்கீழ் மீறுகைகளைத் தீர்க்கும் மற்றும் தண்டத்தொகைகளைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையின் மூலம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், விசாரணையை நடத்தவும் தண்டத்தொகையை விதிக்கவும், அலுவலர் ஒருவரைத் தீர்ப்பளிக்கும் அலுவலராக நியமனம் செய்யலாம்:

வரம்புரையாக, அரசானது, தேவைப்படலாகிறவாறு, தீர்ப்பளிக்கும் அலுவலர்கள் பலரை நியமனம் செய்யலாம்.

(2) தீர்ப்பளிக்கும் அலுவலரின் கருத்தில், விசாரணையின் பொருட்கூறுகளுக்குப் பயனுள்ளதாக அல்லது அதற்கு தொடர்புடையதாக இருக்கும் எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிக்குமாறு, அல்லது சாட்சியம் அளிக்க அல்லது வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை நன்கு அறிந்த நபரெவரையும், தீர்ப்பளிக்கும் அலுவலர், அழைப்பாணை விடுத்து, வருகை தருமாறு கட்டாயப்படுத்தலாம் மற்றும் அத்தகைய விசாரணையின் பேரில், தொடர்புடைய நபர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் இணங்கத் தவறியுள்ளார், என அவர் மனநிறைவடைந்தார் எனில், அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய தண்டத்தொகையை விதிக்கலாம்:

வரம்புரையாக, அத்தகைய தண்டத்தொகை எதுவும், விளக்கமளிப்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்காமல் விதிக்கப்படுதலாகாது.

9–C. மேல்முறையீடு.– (1) 9–B பிரிவின்கீழ் தீர்ப்பளிக்கும் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் இடருற்ற நபரெவரும், ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், தமிழ்நாடு அரசிதழில் அரசால் அறிவிக்கை செய்யப்படலாகிற மேல்முறையீட்டு அலுவலரிடம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மேல்முறையீடு செய்யலாம்:

வரம்புரையாக, மேல்முறையீட்டாளர், அந்தக் காலஅளவிற்குள் மேல்முறையீடு செய்யாமலிருப்பதற்குப் போதிய காரணம் இருந்திருக்கிறது என மேல்முறையீட்டு அலுவலரை மனநிறைவடையச் செய்தால், அறுபது நாள் காலஅளவு கழிந்த பின்பு மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(2) மேல்முறையீட்டு அலுவலரானவர், மேல்முறையீட்டின் தரப்பினருக்கு விளக்கமளிப்பதற்கான வாய்பொன்றை வழங்கிய பின்பு, அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(3) மேல்முறையீட்டு அலுவலரானவர், மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் அதனை முடித்து வைத்தல் வேண்டும்.

9–D. வசூலித்தல்.– நேர்விற்கேற்ப, 9–B ஆம் பிரிவு அல்லது 9–C பிரிவின்கீழ் தண்டத்தொகை விதிக்கப்பட்டிருப்பின், அது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வைப்பீடு செய்யப்படவில்லையெனில், செலுத்தவேண்டிய தொகையானது, நிலவருவாயின் நிலுவைத் தொகையை வசூலிப்பது போன்று வசூலிக்கப்படுதல் வேண்டும்.".

நோக்கக் காரண விளக்கவுரை.

தமிழ்நாடு அரசானது, வணிகம் செய்வதை எளிதாக்குதல் மற்றும் வாழ்க்கை முறையை எளிதாக்குதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும், தேவையற்ற வழக்குகளை நீக்கி, ஒழுங்குமுறை நடைமுறைகளை எளிமைப்படுத்துவதன் மூலம், மாநிலத்தை உலகளவில் மிகவும் முன்னுரிமையளிக்கப்படும் முதலீட்டு இடமாக மாற்றுவதற்கும் உறுதி பூண்டுள்ளது. மேற்கண்ட இலக்கை எய்த, தமிழ்நாடு அரசானது, நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க மற்றும் வணிகம் செய்வதை எளிதாக்கும் வகையில், சட்டம் இயற்றுதலில் பல்வேறு சீர்திருத்தங்களை செயல்படுத்த உறுதியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

2. வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கும், வாழ்க்கையை எளிதாக்குவதற்கும், நம்பிக்கை அடிப்படையிலான நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், குறித்தசில சிறு குற்றங்கள் மற்றும் நடைமுறை குறைபாடுகளைக் குற்றமற்றதாக்குவதும், நீதிமன்றங்களில் வழக்குத் தொடருவதன் மூலம் விதிக்கப்படும் சிறைத்தண்டனை மற்றும் அபராதம் போன்ற குற்றவியல் தண்டனைகளுக்குப் பதிலாக நிருவாகத் தீர்ப்பு செயல்முறை மூலம் பணம்சார்ந்த உரிமையியல் தண்டத்தொகைகள் விதிப்பதும் கட்டாயமாகும். அதற்கிணங்கியவாறு, அரசானது, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிலையங்களில் சேர்க்கைச் சட்டத்தைக் (தமிழ்நாடு சட்டம் 3/2007) கூறப்பட்ட நோக்கத்திற்காக, தகுந்தவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

முனைவர் கோவி. செழியன்,
உயர்கல்வித் துறை அமைச்சர்.

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2) மற்றும் 3 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை மேற்கொள்வதற்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

முனைவர் கோவி. செழியன்,
உயர்கல்வித் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
2025 அக்டோபர் 17.

கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/2025

1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்திய குடியரசின், எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையில் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கக் கூடிய அத்தகைய நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

குடியரசுத் தலைவரின் சட்டம் 19/1976.

42 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்), 42 ஆம் பிரிவில், ''நூறு ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதத்துடன் தண்டிக்கப்படுதல்'' எனும் சொற்றொடருக்காக, ''ஒரு இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

43 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 43 ஆம் பிரிவில்,–

(1) (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

''(1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதி எதனையும், நபரெவரும் வேண்டுமென்றே மீறுகைகள் அல்லது மீறுகைகளுக்கு முயலுதல் அல்லது மீறுகைகளுக்கு அறிந்தே ஆதரித்துள்ளார் எனில், அவர், இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் எந்தவொரு தண்டத்தொகைக்கும் உள்ளாதல் வேண்டும்; மற்றும் முதல் மீறுகைக்கான தண்டத்தொகை விதித்த பிறகும் எந்தவொரு மீறுகையும் தொடரப்படும் நேர்வில் அத்தகைய மீறுகை தொடரும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் கூடுதல் தண்டத்தொகைக்கும் உள்ளாதல் வேண்டும்''.

(2) (2) ஆம் உட்பிரிவில், ''ஒரு மாதம் வரை நீட்டிக்கலாகும் ஒரு கால அளவிற்கு சிறைத்தண்டனை, அல்லது ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதம், அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்'' எனும் சொற்றொடருக்காக, ''ஐந்து லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

43–A, 43–B. 43–C மற்றும் 43–D எனும் புதிய உட்பிரிவை உட்புகுத்துதல்.

4. முதன்மைச் சட்டத்தின் 43 ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவுகள் உட்புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:–

"**43–A. மீறுகைகளை சமரசமாகத் தீர்த்தல்.–** (1) 42 அல்லது 43 ஆம் பிரிவுகளின்கீழ் தண்டத் தொகைக்கு உள்ளாகக்கூடிய, மீறுகை எதுவும், தீர்ப்பு நடவடிக்கையைத் தொடங்குவதற்கு முன்போ அல்லது பின்போ, ஆனால் தண்டத்தொகை விதிக்கப்படுவதற்கு முன்பு, அத்தகைய அலுவலர் குறிப்பிடக்கூடிய அத்தகைய தொகையைச் செலுத்துவதன் பேரில், தமிழ்நாடு அரசிதழில், அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும், அந்த அலுவலரால் சமரசம் செய்யப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, அத்தகைய தொகையானது, எந்நேர்விலும், அந்த மீறுகைக்கு, இந்தச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படக்கூடிய அதிகபட்ச தண்டத்தொகையை விட அதிகமாக இருத்தல் கூடாது.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் மீறுகை சமரசமாக தீர்க்கப்பட்டிருப்பின், அந்த மீறுகை தொடர்பாக இந்தச் சட்டத்தின் கீழ் வேறு எந்த நடவடிக்கையும் தொடங்கப்படுதலோ அல்லது தொடர்ந்து நடத்தப்படுதலோ கூடாது.

43–B. தீர்ப்பளித்தல்.– (1) அரசானது, இந்தச் சட்டத்தின் கீழ் மீறுகைகளைத் தீர்க்கும் மற்றும் தண்டத்தொகைகளைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக, தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையின் மூலம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், விசாரணையை நடத்தவும் தண்டத் தொகையை விதிக்கவும் அலுவலர் ஒருவரை தீர்ப்பளிக்கும் அலுவலராக நியமிக்கலாம்:

வரம்புரையாக, அரசானது, தேவைப்படலாகும், பல தீர்ப்பளிக்கும் அலுவலர்களை நியமனம் செய்யலாம்.

(2) தீர்ப்பளிக்கும் அலுவலரின் கருத்தில், விசாரணையின் பொருட்கூறுகளுக்குப் பயனுள்ளதாக அல்லது அதற்கு தொடர்புடையதாக இருக்கும் எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிக்குமாறு அல்லது சாட்சியம் அளிக்க அல்லது வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை நன்கு அறிந்த நபரெவரையும், தீர்ப்பளிக்கும் அலுவலர், அழைப்பாணை விடுத்து, வருகை தருமாறு கட்டாயப்படுத்தலாம் மற்றும் அத்தகைய விசாரணையின் பேரில், தொடர்புடைய நபர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் இணங்கத் தவறியுள்ளார், என அவர் மனநிறைவடைந்தார் எனில், அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய தண்டத்தொகையை விதிக்கலாம்:

வரம்புரையாக, அத்தகைய தண்டத்தொகை எதுவும், விளக்கமளிப்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்காமல் விதிக்கப்படுதலாகாது.

43–C. மேல்முறையீடு.– (1) 43–B பிரிவின்கீழ் தீர்ப்பளிக்கும் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் இடருற்ற நபரெவரும், ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், தமிழ்நாடு அரசிதழில் அரசால் அறிவிக்கை செய்யப்படலாகிற மேல்முறையீட்டு அலுவலரிடம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மேல்முறையீடு செய்யலாம்:

வரம்புரையாக, மேல்முறையீட்டாளர், அந்தக் காலஅளவிற்குள் மேல்முறையீடு செய்யாமலிருப்பதற்குப் போதிய காரணம் இருந்திருக்கிறது என மேல்முறையீட்டு அலுவலரை மனநிறைவடையச் செய்தால், அறுபது நாள் காலஅளவு கழிந்த பின்பு மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(2) மேல்முறையீட்டு அலுவலரானவர், மேல்முறையீட்டின் தரப்பினருக்கு விளக்கமளிப்பதற்கான வாய்ப்பொன்றை வழங்கிய பின்பு, அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(3) மேல்முறையீட்டு அலுவலரானவர், மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் அதனை முடித்து வைத்தல் வேண்டும்.

43–D. வசூலித்தல்.– நேர்விற்கேற்ப, 43–B பிரிவு அல்லது 43–C பிரிவின்கீழ் தண்டத்தொகை விதிக்கப்பட்டிருப்பின், அது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வைப்பீடு செய்யப்படவில்லையெனில், செலுத்த வேண்டிய தொகையானது, நில வருவாயின் நிலுவைத் தொகையை வசூலிப்பது போன்று வசூலிக்கப்படுதல் வேண்டும்.''.

5. முதன்மைச் சட்டத்தின் 44 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– 44 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

“44. நிறுமங்களால் செய்யப்படும் மீறுகை.– (1)இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனின் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதி எதனின் மீறுகையானது நிறுமத்தால் செய்யப்பட்டிருக்குமிடத்து, அம்மீறுகை இழைக்கப்பட்ட போது, அந்நிறுமத்தின் அலுவல் நடைபெறுவதற்கு அந்நிறுமத்தின் நேரடிப் பொறுப்பிலிருந்த மற்றும் பொறுப்பைக் கொண்டிருந்த ஒவ்வொருவரும், அந்நிறுமமும், உட்பட்ட அம்மீறுகையை செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்.

வரம்புரையாக, இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய நபர்ரெவரும், அம்மீறுகை தமக்குத் தெரியாமலேயே செய்யப்பட்டிருப்பதாக அல்லது அத்தகைய மீறுகையை தடுக்க தம்மால் இயன்ற அனைத்தையும் செய்ததாக மெய்ப்பித்தால், அத்தகைய நபர், இந்தச் சட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள எந்தவொரு தண்டத் தொகைக்கும் உள்ளாதல் ஆகாது.

(2) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய மீறுகை எதுவும் நிறுமத்தால் செய்யப்பட்டிருக்குமிடத்து, அந்த மீறுகையானது, அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் அனுமதியுடன் அல்லது உடந்தையுடன் அல்லது அவருடைய கவனமின்மை காரணமாக செய்யப்பட்டிருப்பதாக மெய்ப்பிக்கப்பட்டால், அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர், அல்லது பிற அலுவலர் அம்மீறுகையை செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத் தொகைக்கு உள்ளாதல் வேண்டும்.

விளக்கம்.— இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,—

(a) ''நிறுமம்'' என்பது, எந்தவொரு கூட்டு நிறுவனம் என்று பொருள்படும் மற்றும் பொறுப்புக்கட்டளை, ஒரு நிறுவகம், சங்கம் அல்லது பிற தனி நபர்களின் கழகத்தையும் உள்ளடக்கும்; மற்றும்

(b) ''இயக்குநர்'' என்பவர்,

(i) நிறுவகத்தை பொறுத்தவரை, அந்நிறுவகத்தின் பங்குதாரர் என்று பொருள்படும்,

(ii) ஒரு சங்கம், ஒரு பொறுப்புக்கட்டளை அல்லது தனிநபர்களின் பிற கழகம் என்பது அந்தச் சங்கம், பொறுப்புக்கட்டளை அல்லது பிற கழகத்தின் விதிகளின் கீழ் நேர்விற்கேற்ப சங்கம், பொறுப்புக்கட்டளை அல்லது பிற கழகத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதற்காக பொறுப்பளிக்கப்பட்ட நபர் என்று பொருள்படும்.''.

45 மற்றும் 46 ஆம் பிரிவுகளை விட்டுவிடுதல்.

6. முதன்மைச் சட்டத்தின் 45 மற்றும் 46 ஆம் பிரிவுகளானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

48 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. முதன்மைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவில், ''இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) 21 ஆம் பிரிவு'' எனும் சொற்றொடருக்காக, ''2023 ஆம் ஆண்டு பாரதீய நியாய சன்ஹிதாவின் (மையச் சட்டம் 45/2023) 2 ஆம் பிரிவின் (28) ஆம் கூறு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

<u>நோக்கக் காரண விளக்கவுரை</u>

தமிழ்நாடு அரசானது, வணிகம் செய்வதை எளிதாக்குதல் மற்றும் வாழ்க்கை முறையை எளிதாக்குதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும், தேவையற்ற வழக்குகளை நீக்கி, ஒழுங்குமுறை நடைமுறைகளை எளிமைப்படுத்துவதன் மூலம், மாநிலத்தை உலகளவில் மிகவும் முன்னுரிமையளிக்கப்படும் முதலீட்டு இடமாக மாற்றுவதற்கும் உறுதி பூண்டுள்ளது. மேற்கண்ட இலக்கை எய்த, தமிழ்நாடு அரசானது, நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க மற்றும் வணிகம் செய்வதை எளிதாக்கும் வகையில், சட்டமியற்றுதலில் பல்வேறு சீர்திருத்தங்களை செயல்படுத்த உண்மையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

2. வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கும், வாழ்க்கையை எளிதாக்குவதற்கும், நம்பிக்கை அடிப்படையிலான நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், குறித்தசில சிறு குற்றங்கள் மற்றும் நடைமுறை குறைபாடுகளை குற்றமற்றதாக்குவதும், நீதிமன்றங்களில் வழக்குத் தொடருவதன் மூலம் விதிக்கப்படும் சிறைத்தண்டனை மற்றும் அபராதம் போன்ற குற்றவியல் தண்டனைகளுக்குப் பதிலாக நிருவாக தீர்ப்பு செயல்முறை மூலம் பணம்சார்ந்த உரிமையியல் தண்டத்தொகைகள் விதிப்பதும் கட்டாயமாகும். அதற்கிணங்கியவாறு, அரசானது, 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 19/1976) கூறப்பட்ட நோக்கத்திற்காக, தகுந்தவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

முனைவர் கோவி. செழியன்,
உயர்கல்வித் துறை அமைச்சர்.

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2) மற்றும் 4 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை மேற்கொள்வதற்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

முனைவர் கோவி. செழியன்,
உயர்கல்வித் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
2025 அக்டோபர் 17.

கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 43/2025

2025–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து மேலும் குறிப்பிட்ட சில தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், 2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 6) சட்டம் என வழங்கப்பெறும்.

2025–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து துணை நிதி ஒதுக்கம் செய்தல்.

2. மாநில அரசு, 2025–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைப்படுகிற இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து பதினான்கு கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து எண்பத்து ஏழாயிரம் ரூபாய்க்கு மேற்படாத மேலுமானதொரு தொகையை–

(a) இணைப்புப் பட்டியலின் (3)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் *சாட்டப்பட்ட* துணைச் செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

இணைப்புப் பட்டியல்.
(2–ஆம் பிரிவைக் காண்க).

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல்		
			சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது*	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
001	மாநில சட்டமன்றம்	வருவாய்	4,000	...	4,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
002	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	வருவாய்	1,000	*1,000*	2,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
003	நீதி நிருவாகம்	வருவாய்	15,000	*7,000*	22,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
004	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	வருவாய்	15,000	...	15,000
		மூலதனம்	4,000	...	4,000
		கடன்	...	...	...
005	வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை	வருவாய்	85,37,000	*1,66,61,000*	2,51,98,000
		மூலதனம்	4,000	...	4,000
		கடன்	142,29,00,000	...	142,29,00,000
006	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	வருவாய்	20,000	...	20,000
		மூலதனம்	3,000	...	3,000
		கடன்	...	...	...
007	மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	வருவாய்	17,000	...	17,000
		மூலதனம்	6,000	...	6,000
		கடன்	...	...	...
008	பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	வருவாய்	98,98,01,000	...	98,98,01,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
009	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	வருவாய்	31,000	...	31,000
		மூலதனம்	150,05,76,000	...	150,05,76,000
		கடன்	...	...	...
010	வணிகவரிகள் (வணிகவரி மற்றும் பதிவுத் துறை)	வருவாய்	11,000	...	11,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
011	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிகவரி மற்றும் பதிவுத் துறை)	வருவாய்	5,000	...	5,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
012	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	வருவாய்	2,000	...	2,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல்		
			சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது*	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
013	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	**வருவாய்**	13,000	...	13,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
015	சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை)	**வருவாய்**	1,000	...	1,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
016	நிதித் துறை	**வருவாய்**	12,000	...	12,000
		மூலதனம்	1,000	...	1,000
		கடன்	100,00,00,000	...	100,00,00,000
017	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	**வருவாய்**	6,000	...	6,000
		மூலதனம்	...	...	...
		கடன்	1,000	...	1,000
018	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	**வருவாய்**	4,000	...	4,000
		மூலதனம்	...	...	...
		கடன்	13,36,02,000	...	13,36,02,000
019	மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை	**வருவாய்**	1,02,000	*81,89,000*	82,91,000
		மூலதனம்	27,25,07,000	...	27,25,07,000
		கடன்	...	...	...
020	உயர்கல்வித் துறை	**வருவாய்**	42,000	...	42,000
		மூலதனம்	2,000	...	2,000
		கடன்	...	...	...
021	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	**வருவாய்**	5,000	...	5,000
		மூலதனம்	15,000	*93,31,51,000*	93,31,66,000
		கடன்	...	...	...
022	காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	**வருவாய்**	45,000	...	45,000
		மூலதனம்	...	...	...
		கடன்	1,000	...	1,000
023	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	**வருவாய்**	9,000	*43,30,000*	43,39,000
		மூலதனம்	1,000	...	1,000
		கடன்	...	...	...
024	சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	**வருவாய்**	13,000	...	13,000
		மூலதனம்	1,000	...	1,000
		கடன்	...	...	...
025	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	**வருவாய்**	5,000	...	5,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
026	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	**வருவாய்**	15,000	...	15,000
		மூலதனம்	...	...	...
		கடன்	1,000	...	1,000

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது*	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
027	தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை	**வருவாய்**	5,000	...	5,000
		மூலதனம்	1,000	...	1,000
		கடன்	...	...	...
028	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	**வருவாய்**	49,53,000	...	49,53,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
029	சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	**வருவாய்**	4,49,000	...	4,49,000
		மூலதனம்	12,000	...	12,000
		கடன்	...	...	...
030	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	**வருவாய்**	4,000	...	4,000
		மூலதனம்	10,92,09,000	...	10,92,09,000
		கடன்	...	...	...
031	தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை	**வருவாய்**	7,000	...	7,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
032	தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை	**வருவாய்**	16,000	...	16,000
		மூலதனம்	4,000	...	4,000
		கடன்	...	...	...
033	சட்டத் துறை	**வருவாய்**	1,00,12,000	...	1,00,12,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
034	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	**வருவாய்**	10,000	...	10,000
		மூலதனம்	6,000	...	6,000
		கடன்	1,000	...	1,000
035	மனிதவள மேலாண்மைத் துறை	**வருவாய்**	13,000	*19,97,000*	20,10,000
		மூலதனம்	2,95,00,000	...	2,95,00,000
		கடன்	...	...	...
036	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	**வருவாய்**	7,000	...	7,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
037	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	**வருவாய்**	1,000	...	1,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
038	பொதுத் துறை	**வருவாய்**	5,16,27,000	*30,00,000*	5,46,27,000
		மூலதனம்	10,00,01,000	...	10,00,01,000
		கடன்	...	...	...
039	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	**வருவாய்**	2,000	...	2,000
		மூலதனம்	13,000	*26,31,87,000*	26,32,00,000
		கடன்	...	...	...

கோரிக்கை எண் (1)	பணிகளும் நோக்கங்களும் (2)		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது (3) (ரூ.)	மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* (4) (ரூ.)	மொத்தம் (5) (ரூ.)
040	நீர்வளத் துறை	**வருவாய்**	7,000	*31,91,000*	31,98,000
		மூலதனம்	48,000	*20,36,23,000*	20,36,71,000
		கடன்	...	...	...
041	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	**வருவாய்**	26,000	*5,79,15,000*	5,79,41,000
		மூலதனம்	...	*2,02,87,000*	2,02,87,000
		கடன்	80,45,000	...	80,45,000
042	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	**வருவாய்**	7,000	...	7,000
		மூலதனம்	1,000	...	1,000
		கடன்	...	...	...
043	பள்ளிக் கல்வித் துறை	**வருவாய்**	17,000	...	17,000
		மூலதனம்	5,000	...	5,000
		கடன்	...	...	...
044	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	**வருவாய்**	5,000	...	5,000
		மூலதனம்	...	...	...
		கடன்	17,15,10,000	...	17,15,10,000
045	சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை	**வருவாய்**	38,000	...	38,000
		மூலதனம்	62,68,84,000	...	62,68,84,000
		கடன்	...	...	...
046	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	**வருவாய்**	12,000	...	12,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
047	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	**வருவாய்**	14,000	*1,000*	15,000
		மூலதனம்	1,000	...	1,000
		கடன்	...	...	...
048	போக்குவரத்துத் துறை	**வருவாய்**	3,000	...	3,000
		மூலதனம்	2,000	...	2,000
		கடன்	1,211,49,82,000	...	1,211,49,82,000
049	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	**வருவாய்**	10,000	...	10,000
		மூலதனம்	1,000	...	1,000
		கடன்	...	...	...
051	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	**வருவாய்**	903,66,88,000	...	903,66,88,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
052	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	**வருவாய்**	1,14,33,000	...	1,14,33,000
		மூலதனம்	...	...	...
		கடன்	39,00,000	...	39,00,000
053	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	**வருவாய்**	2,00,03,000	...	2,00,03,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்		கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது	மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது*	மொத்தம்
(1)	(2)		(3)	(4)	(5)
			(ரூ.)	(ரூ.)	(ரூ.)
054	வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை)	**வருவாய்**	24,000	*65,54,000*	65,78,000
		மூலதனம்	10,000	...	10,000
		கடன்	...	...	...
055	இயற்கை வளங்கள் துறை	**வருவாய்**	2,000	...	2,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
	கடன் செலவுகள்	**வருவாய்**	...	*6,000*	6,000
		மூலதனம்	...	...	...
		கடன்	...	...	...
	மொத்தம்	**வருவாய்**	**1,013,41,26,000**	***10,18,52,000***	**1,023,59,78,000**
		மூலதனம்	**263,88,18,000**	***142,02,48,000***	**405,90,66,000**
		கடன்	**1,485,49,43,000**	**...**	**1,485,49,43,000**
	பெருமொத்தம்		**2,762,78,87,000**	***152,21,00,000***	**2,914,99,87,000**

நோக்க–காரண விளக்கவுரை.

இச்சட்ட முன்வடிவானது––

(a) 2025– ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டிற்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) அந்த ஆண்டிற்காக, மாநிலத் தொகுநிதியத்தின்மீது *சாட்டப்பட்ட* துணைச் செலவினத்தையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகையை மாநிலத்தின் தொகு நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204–ஆம் உறுப்பின் (1)– ஆம் கூறுடன் இணைத்துப் பொருள் கொள்ளப்பட வேண்டிய 205–ஆம் உறுப்பினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

தங்கம் தென்னரசு,
நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 அக்டோபர் 17.

கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.